1982 மார்ச் 16]

கரூர் விவசாய மார்க்கெட்டிங் குழுவிற்கு நிலம் கையகப்படுத்தும் செயற் குறிப்பு.

*வினா எண் 484—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், கரூர் வட்டம், தாந்தோணி பேரூராட்சி எல்லைக்குள் கரூர் விவசாய மார்க்கெட்டிங் கமிட்டிக்கு நிலம் கையகப்படுத்தியது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், எத்தனை ஏக்கர் நிலம் கையகப்படுத்தப் பட்டது ?

(இ) கமிட்டிக்கான கட்டிடம் கட்ட ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) ஆம்.

(ஆ) 8.25 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டது.

(இ) விற்பனைக் குழு, பொதுப்பணித்துறை மூலமாக, இவ் வேலையைச் செய்து முடிக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறையின் மூலமாக கிடங்குகள் கட்டப் படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எவ்வளவு மதிப் பீட்டில் கட்டப்படும், எப்போது கட்டப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, கையகப்படுத்தப்பட்ட 8.25 ஏக்கர் நிலத்தில் 1,88,000 ரூபாய் செலவில் ஒரு வியாபார நடவடிக்கைக் கூடமும், 43,000 ரூபாய் செலவில் ஒரு உலர் களமும கட்டப்பட இருக்கின்றது.

ஏரூர் கிராமத்திற்கு ஆரம்பச் சுகாதார நிலையம் அமைத்தல்.

*வினா எண். 485—திரு. சி. சிவப்பிரகாசம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுச்சத்திரம் ஒன்றியத்தில் 5,000 ஜனத்தொகை உள்ள ஏரூர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று நிறுவ அரசிடம் திட்டமுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: புதுச்சத்திரம் ஒன்றி யத்திலுள்ள ஏரூர் கிராமத்தில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் நிறுவ அரசிடம் தற்போது திட்டம் ஏதுமில்லை.